மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை-2022
முன்னோடிப் பரீட்சை - 02

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2022

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2022

வினாத்தாள் - I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் .....

❖ **பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.**

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும், உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்	..... **பெயர்** ..... **ஒப்பம்**
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... **பெயர்** ..... **பெயர்**
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... **பெயர்** ..... **ஒப்பம்**
அதிபர் மேற்பார்வை செய்தேன்.	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English


தரம்
01-A/L

76667-4945


தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk


1. பின்வரும் மூன்று உருக்களில் ஒன்றில் வேறுபாடு உள்ளது. அந்த உருவைத் தெரிவு செய்க.



(1)



(2)



(3)

2. ஒரு தொகுதியில் உள்ளடக்குவதற்கு மிகப் பொருத்தமான இரண்டு பொருட்கள் எவை?




(A)



(B)



(C)



(D)




(E)

(1) A உம் D உம் (2) B உம் E உம் (3) B உம் C உம்


3. பின்வரும் உருக்களுக்கிடையே உள்ள சிறந்த தொடர்பின் அடிப்படையில் இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கத்தக்க முறை யாது?



(A)



(B)



(C)



(D)

(1) A,C உம் B,D உம் (2) A,B உம் C,D உம் (3) A,D உம் B C உம்

4. பின்வரும் உருக்களில் காட்டப்பட்டுள்ளவற்றில் இரண்டுக்கு மட்டும் பொருத்தமான கூற்று எது?









(1) நவீன விளையாட்டு (2) கிராமிய விளையாட்டு (3) உடற்பயிற்சிக்கான விளையாட்டு

5. அடைப்பினுள் உள்ள உருவை உருவாக்குவதற்குப் பயன்படுத்த வேண்டிய அதே விதத்தில் அமைந்த மிகப் பொருத்தமான உருக்கள் இரண்டும் எவை?







(A) (B) (C) (D)

(1) B உம் A உம் (2) D உம் A உம் (3) B உம் C உம்

6. தரப்பட்டுள்ள உருக்கோலத்தில் அடுத்ததாக வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)


7. 

உரு - 1 உரு - 2

உரு 1 இனை முறிகோடுகள் வழியே அம்புக்குறி காட்டும் திசையில் மடித்து உரு 2 பெறப்பட்டுள்ளது. பின்னர் உரு 2 இல் உள்ளவாறு முறிகோடுகள் வழியே வெட்டித் துண்டுகளாக்கும் போது கிடைக்கும் முக்கோணத் துண்டுகளின் எண்ணிக்கை யாது?

(1) 4 (2) 5 (3) 6

8. தரப்பட்டுள்ள உருக்களில் கால்வாசிக்கும் அதிகமாக நிறந்தீட்டப்பட்ட உரு எது?



(1) (2) (3)

9. அருகே தரப்பட்டுள்ள உருவினை அவதானிக்கும் போது புலப்படாத ஆங்கில எழுத்து எது?




(1) T (2) H (3) M

10. *வர்ணங்களைக் கொண்டவன் நான்*
வெயில் மழை இணைவில் பிறந்திடுவேன்
ஆதவன் எதிரில் அகம் மகிழ்வேன்
குறுகிய நேரத்தில் மறைந்திடுவேன்.

இந்தப் பாடலின் கருத்து மிகச் சரியாகப் பொருந்துவது,


(1) வானவில்லுக்கு (2) வண்ணத்துப் பூச்சிக்கு (3) சூரியகாந்திப் பூவிற்கு

11. தரப்பட்டுள்ள எண் கோலத்தில் வினாக்குறி இடப்பட்ட இடத்தில் இடம்பெற வேண்டிய எண் யாது?




(1) 20 (2) 26 (3) 49

12. மூவர் விளையாட்டு மைதானத்தில் செலவிட்ட நேரம் பின்வருமாறு காட்டப்படுகிறது.
கமல் முற்பகல் ஏழு மணி தொடக்கம் முற்பகல் பதினொரு மணி வரையிலும் காதர் முற்பகல் ஆறு மணி தொடக்கம் முற்பகல் பதினொரு மணிவரையிலும், காந்தன் முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் நண்பகல் பன்னிரெண்டு மணி வரையிலும் மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட்டனர். அவர்கள் செலவிட்ட நேரத்தின் அளவினைக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

13. தரம்-5 ஆசிரியரால் மாணவர்களிடம் அவர்கள் விரும்பும் பூக்களின் எண்ணிக்கை தொடர்பாக வினவப் பட்டு. அதற்கேற்ப ஆசிரியரால் கீழே உள்ள உரு வரையப்பட்டது.



தாமரைப் பூக்களை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை ஆறு எனின், வகுப்பிலுள்ள மொத்த மாணவர் எண்ணிக்கை யாது?

(1) 24 (2) 96 (3) 72


14. கீழே கட்டங்களில் தரப்பட்டுள்ள A, B, C ஆகிய மூன்று உருக்களையும் அவதானியுங்கள்.

H A H	T V A	X V X
A	**B**	**C**

மூன்று உருக்களிலும் ஏதோ ஒரு பொதுப் பண்புகளுக்கேற்ப இவற்றில் இரு உருக்களைச் சோடியாக்க முடியும். அந்தச் சோடி,

(1) A யும் B யும் (2) A யும் C யும் (3) B யும் C யும்

15. சுரேஸ் தனது வீட்டிலிருந்து தனது நண்பனின் வீட்டிற்குச் சென்ற தூரம் வரிப்படத்தில் காட்டப் பட்டுள்ளது.




சுரேஸ் கிழக்குத்திசை வழியாக நண்பனின் வீட்டிற்குச் சென்ற மொத்தத் தூரம்.

(1) 275 m (2) 1075 m (3) 675 m

16. காலையில் பாடசாலைக்குப் பேருந்தில் செல்லும் யஸ்மிதா சூரிய ஒளி படாமல் இருப்பதற்குப் பேருந் தின் இடது பக்க ஆசனத்தில் அமர வேண்டும் எனின், பாடசாலை விட்டு மாலை வீடு செல்லும்போது சூரிய ஒளி படாமல் இருப்பதற்குப் பேருந்தின் எப்பக்க ஆசனத்தில் அவள் அமர வேண்டும்.

(1) வலது பக்கம் (2) இடது பக்கம் (3) கூற முடியாது.

17. 

இவ் உருவில் காணப்படும் மேற்பரப்புக்களின் எண்ணிக்கை யாது?

(1) 16 (2) 14 (3)12

18. ஒருவன் தனது கோழிப்பண்ணையிலிருந்து ஒவ்வொரு நாளும் 29 முட்டைகள் வீதம் சேகரிப்பான். ஞாயிற்றுக்கிழமை வரையும் 174 முட்டைகள் சேகரித்தான் எனின், அவன் எந்த நாளில் இருந்து முட்டைகளைச் சேகரிக்கத் தொடங்கினான்.

(1) செவ்வாய்க்கிழமை (2) புதன்கிழமை (3) திங்கட்கிழமை

19. சதுர வடிவக் காணி ஒன்றில் ஒரு பக்கத்தில் இருந்து பார்க்கும் போது 7 தூண்கள் தென்படும் வகையில் அக்காணியைச் சுற்றி தூண்கள் நடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. ஒரு தூணிற்கான செலவு ரூபாய் 90.00 எனின், அவர் காணியைச் சுற்றித் தூண்கள் நடுவதற்காகச் செலவழித்த மொத்தப் பணம் எவ்வளவு?

(1) ரூபாய் 2160 (2) ரூபாய் 2520 (3) ரூபாய் 2415

20. எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக 5 பேர் வரிசையில் நின்றனர். சுதனுக்கு முன் இருவர் நின்றனர். இறுதியில் இருந்து நான்காவதாகவும் சுதனுக்கும் விமலுக்கும் இடையில் சுமன் நின்றான். இறுதியில் வரதன் நின்றான் எனின், அவ்வரிசையில் முன்னாலிருந்து இறுதிவரை நிற்பவர்களை ஒழுங்கு முறையில் காட்டும் விடை எது?

(1) விமல், கரன், சுதன், சுமன், வரதன்
(2) விமல், சுமன், சுதன், கரன், வரதன்
(3) விமல், சுதன், கரன், சுமன், வரதன்


21. சுமன், தீபன் ஆகிய இருவரும் ஓரிடத்தில் இருந்து எதிரெதிர்த் திசையில் மணித்தியாலத்திற்கு 60 km மாறா வேகத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்து 2 மணித்தியாலம் 30 நிமிடங்கள் பயணம் செய்தபின் குறித்த இடத்தை அடைந்தனர் எனின், தற்போது அவர்கள் இருவருக்கும் இடையிலான தூரம் யாது?

(1) 300 km (2) 150 km (3) 200 km

22. வீதி வேலைகள் நடைபெறும் இடத்திற்கு முன்பாக "எச்சரிக்கை" என அறிவுறுத்தல் பலகை காணப்படுவதற்கான காரணம்?


(1) தண்டனை வழங்குவதற்கு (2) விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு (3) வேகமாகச் செல்வதற்கு

23. கீழே உள்ள திண்ம உருவை அம்புக்குறி காட்டும் திசை வழியே பார்க்கும் போது புலப்படும் வடிவத்தைத் தெரிவு செய்க.






(1)



(2)



(3)

24. குறித்த ஒரு வேலையை எட்டு நாட்களில் மூன்று மனிதர்கள் செய்து முடிப்பர். அதே வேலையை நான்கு நாட்களில் செய்து முடிப்பதற்கு எத்தனை மனிதர்கள் தேவை?

(1) 5 நாட்கள் (2) 6 நாட்கள் (3) 7 நாட்கள்.

25. குமார் வகுப்பறையில் "நாங்கள் அதிவேக நெடுஞ்சாலையில் பேருந்தில் செல்லும் போது மோட்டார் சைக்கிள் பேருந்தை முந்திக் கொண்டு சென்றது" எனக் கூறினான். இக் கூற்று,

(1) பிழையானது (2) சரியானது (3) கூற முடியாது


26. நிகழ்வு ஒன்றின் ஐந்து சந்தர்ப்பங்கள் உருச்சட்டத்தினுள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்குமுறையாக வரக் கூடியது எது?



A



B



C




D




E

(1) A,B,C,D,E (2) B,D,E,C,A (3) B,E,C,A,D

27. கீழே தரப்பட்டுள்ள உருவில் காட்டப்பட்டுள்ள தராசு சமநிலையில் உள்ளது. இதற்கமைய A தட்டின் நிறை யாது?




(1) 24 kg (2) 12 kg (3) 18 kg

28. 

உரு A,B,C ஆகிய சதுரங்கள் ஒன்றை ஒன்று ஒத்தவை. நிழற்றப்பட்ட பகுதிக்கு தீந்தை பூசுவதற்கு 30ml தீந்தை தேவை எனின், முழு உருவிற்கும் தீந்தை பூசுவ தாயின் தேவைப்படும் தீந்தையின் அளவு பற்றிய சரியான கூற்று.

(1) 100 ml ஆகும்.
(2) 100 ml இலும் குறைவு.
(3) 100 ml இலும் அதிகம்.

29. இவ்வுருவில் எத்தனை முக்கோணிகள் உள்ளன?



(1) 16 (2) 18 (3) 12

30. ஒரு மைதானத்தில் சிவப்பு, பச்சை, நீலம், மஞ்சள், கறுப்பு ஆகிய நிறக் கொடிகள் வரிசையாகப் பறக்கவிடப்பட்ட முறை கீழே தரப் பட்டுள்ளது.

- மஞ்சள் நிறக் கொடி, நீல நிறக் கொடிக்கு முன் உள்ளது.
- பச்சை நிறக் கொடி முதலில் இருந்து பார்க்கும் போது மூன்றாவதாக உள்ளது.
- மைதானத்தின் இறுதியில் உள்ளது நீல நிறக் கொடி ஆகும்.
- சிவப்பு நிறக் கொடியும் மஞ்சள் நிறக் கொடியும் அருகருகே காணப்படவில்லை.

தரவுகளின் அடிப்படையில் மிகச் சரியான கூற்று.

(1) முதலாவதாக சிவப்பு நிறக் கொடி அமைந்துள்ளது.
(2) பச்சை நிறக் கொடிக்கு அடுத்ததாக மஞ்சள் நிறக் கொடி உள்ளது.
(3) இரண்டாவதாக உள்ள கொடியின் நிறம் கறுப்பாகும்

31. நிகழ்வு ஒன்றின் ஆரம்பத்தில் பி.ப. 4.35 மணிக்கு நான்கு மெழுகுவர்த்திகள் ஏற்றி வைக்கப்பட்டன. அவை மேலும் எரிய எடுக்கும் மெழுகுவர்த்திகளின் நேரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது. இதற்கேற்ப அனைத்து மெழுகுவர்த்திகளும் அணையும் நேரம் யாது?



26 நிமிடங்கள் 18 நிமிடங்கள் 38 நிமிடங்கள் 13 நிமிடங்கள்

(1) பி.ப. 5.13 (2) பி.ப. 6.10 (3) பி.ப. 4.43

● **கீழே தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு 32,33 ஆகிய வினாக்களுக்கான விடைகளைத் தெரிவு செய்க.**

மாகாண மட்டப் பரீட்சை ஒன்றில், அம்மாகாணத்திலுள்ள 63 பாடசாலைகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

- முதல் 40 பாடசாலைகளில் - ஆண், ஆண், பெண், பெண், ஆண்
- அடுத்த 23 பாடசாலைகளில் - பெண், ஆண், பெண், ஆண், பெண்

32. 63 பாடசாலைகளிலும் முதலாம், இரண்டாம், மூன்றாம், இடங்களைப் பெற்ற ஆண் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

(1) 3 (2) 126 (3) 103

33. 63 பாடசாலைகளிலும் நான்காம் ஐந்தாம் இடங்களைப் பெற்ற பெண் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

(1) 63 (2) 2 (3) 40

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்




இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...


34. கீழே தரப்பட்டுள்ள செவ்வக வடிவமான அட்டைத் தாளில் அரைவாசிக்கு பச்சை நிறமும் அரைவாசிக்கு செம்மஞ்சள் நிறமும் தீட்டப்பட்டுள்ளது. இத்தாளிலிருந்து ஒரு பக்க நீளம் 2 cm அளவினை உடைய சதுரத்தாள்களாக வெட்டும் போது பெறக் கூடிய செம்மஞ்சள் நிறச் சதுரத் தாள்கள் எத்தனை?



(1) 112 (2) 66 (3) 56

35. அருகே தரப்பட்டுள்ள பெரிய சதுரமுகிக் குற்றியானது

- சிறிய சதுரமுகிக் குற்றிகளாக வெட்டப்பட்டு 27 சதுரமுகிக் குற்றிகள் பெறப் பட்டன.
- அவ்வாறு வெட்டும் போது, வெட்டிய துண்டுகள் ஒன்றின் மீது ஒன்று வைத்து வெட்டப்படாது தனித்தனியாக எடுத்து வெட்டப்பட்டன.




இவ்வாறு வெட்டப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 26 (2) 27 (3) 16

36. ஐந்து பேர் தோற்றிய பரீட்சையில் சித்திப் புள்ளி 40 ஆகும். குறித்த பரீட்சையில் தோற்றிய ஐந்து பேரும் சித்தி பெற்றனர்.அவர்களில் மூன்று பேர் உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இதற்கமைய ஐந்து பேரும் பெற்ற மொத்தப் புள்ளிகளின் மிகக் குறைந்த புள்ளியாக இருக்கக் கூடியது.

(1) 200 (2) 203 (3) 205


37. 

வட்ட வடிவ மைதானம் ஒன்றில் மூன்று இல்லங்களும் விருந்தினர் மண்டபமும் காணப்படும் உரு காட்டப்பட்டுள்ளது. விருந்தினர்கள் மூன்று இல்லங்களுக்கும் சென்று விருந்தினர் மண்டபத்துக்குத் திரும்பி வர எடுக்கும் மிகக் குறைந்த தூரம் எவ்வளவு?

(1) 1125 m (2) 1200 m (3) 1000 m

38. 50 மைல் கற்களைக் கொண்ட மலை ஒன்றில் கமல் 14 மைல் கல்லிற்கு அருகிலும் விமல் 39 ஆவது மைல் கல்லிற்கு அருகிலும் நிற்கின்றனர். கமல் 3 மைல் கல் தூரம் ஏறும் போது விமல் 2 மைல் கல் தூரம் இறங்குவான். எனின் இருவரும் எத்தனையாவது மைல் கல்லிற்கு அருகில் ஒன்றாகச் சந்திப்பார்?

(1) 25 (2) 29 3) 27

39. 

அருகிலுள்ள நீர்த்தாங்கி ஒன்றில் 1000 லீற்றர் நீர் உள்ளது. இதிலுள்ள A நீர்க்குழாய் மூலம் ஒரு நிமிடத்திற்கு 8 லீற்றர் நீரும் B நீர்க்குழாய் மூலம் ஒரு நிமிடத்திற்கு 2 லீற்றர் நீரும் வெளியேறும். இரு நீர்க்குழாய்களையும் சம நேரத்தில் முழுமையாகத் திறந்து விட்டால் இத்தாங்கியில் இருந்து நீர் முழுவதும் எத்தனை நிமிடங்களில் வெளியேறும்?

(1) 100 நிமிடங்களில் (2) 120 நிமிடங்களில் (3) 180 நிமிடங்களில்

40. 50 வினாக்களைக் கொண்டமைந்த நுண்ணறிவு வினாத்தாள் ஒன்றில் சரியாக விடையளிக்கும் ஒவ்வொரு வினாவிற்கும் 2 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். பிழையாக விடையளிக்கும் ஒவ்வொரு வினாவிற்கும் மேலதிகமாக 1 புள்ளி கழிக்கப்படும். இதனடிப்படையில் 64 புள்ளிகளைப் பெற்ற ஒருவர் எத்தனை வினாக்களுக்கு சரியாக விடையளித்திருப்பார்.

(1) 32 (2) 36 (3) 38

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை-2022
முன்னோடிப் பரீட்சை - 02

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2022

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2022

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

சுட்டெண் .....

❖ **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின்** மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும், உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ் வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன.
- **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... பெயர்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்தேன்.	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

1. **பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

அழகான பட்டம் ஒன்றைக் கட்டிய பிரஜா அதனைப் பறக்க விடுவதற்கு தனது நண்பனான சுதனுடன் விளையாட்டு மைதானத்திற்குச் சென்றான். பிரஜா தான் கட்டிய பட்டத்தை வானத்தில் பறக்க விட்டான். காற்றுப் பலமாக வீசியதால் பட்டம் உயர உயரப் பறந்தது. அதனைப் பார்த்து இருவரும் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார்கள். பட்டம் பறந்து கொண்டிருக்கும்போது வெளிவந்த ஓசை யாழ் வாசிப்பது போல் அவர்களின் செவிகளில் ஒலித்தது. பட்டத்தைப் பார்க்கும்போது வண்ணப் பறவையொன்று வானில் பறப்பது போல் காட்சியளிப்பதாக சுதன் பிரஜாவிடம் கூறினான்.

❖ **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

(i) பிரஜா தான் கட்டிய பட்டத்தைப் பறக்க விடுவதற்கு தனது நண்பனான சுதனுடன் எங்கே சென்றான்?

.....

(ii) பட்டம் பறந்து கொண்டிருக்கும் போது வெளிவந்த ஓசை அவர்களின் செவிகளில் எவ்வாறு ஒலித்தது?

.....

(iii) 'அளவற்ற' என்பதைக் காட்டுவதற்கு பந்தியில் பயன்படுத்தப்பட்ட சொல் எது?

.....

(vi) வண்ணப் பறவையொன்று வானில் பறப்பது போல் பட்டம் காட்சியளிப்பதாக சுதன் யாரிடம் கூறினான்?

.....

(v) "பகைவனான" என்பதன் எதிர்க் கருத்துச் சொல்லை எழுதுக?

.....

(vi) அடுக்குமொழி ஒன்றை எழுதுக.

.....

2. உயர்திணை, ஒருமை, படர்க்கைப் பெயர்ச்சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) அவர்கள் (2) மாணவன் (3) அலுமாரி

3. **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

ஒரு / என்னைச் / கருமையான / சூழ்ந்து / ஏற்பாடு / சுற்றிலும் / செய்துள்ளேன் / கொள்ளும்படி /மேகம்

.....

.....

4. **பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறிகளை இடுக.**

குடபுலவியனார் என்ற புலவர் உணவெனப்படுவது நிலத்தொடு நீரே என்கிறார்

5. **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் பிழை (✗) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

(i) கொக்குகள் மீனைக் கொத்துகின்றது. ( )

(ii) சிறுமியர் சிலர் பொம்மை செய்தனர். ( )

(iii) சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்ட ஏனைய விலங்குகள் ஓடி ஒளிந்தது. ( )

(iv) பூந்தோட்டத்தில் மல்லிகைப் பூக்கள் மலர்ந்தது. ( )

6. (i) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

நோயற்ற..... குறைவற்ற செல்வம்.

(ii) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

அதிக ஆசை அழிவைத் தரும்

.....

7. **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) காகம் அங்குமிங்கும்..... (இரை / இறை) தேடியது.

(ii) இலவசப் பாடநூல்களைக் கவனமாகப் பேணிப் பாதுகாப்பது மாணவர்களின்..... (கடைமை / கடமை) ஆகும்.

8. பின்வரும் மரபுத் தொடர்களுக்குப் பொருத்தமான கருத்தை எழுதுக.

(i) பூசி மெழுகுதல் - .....

(ii) எதிர் நீச்சல் - .....

9. **பின்வரும் இணைமொழிகளில் மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்து வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.**

(வரவு செலவு, நகமும் சதையும், ஏறக்குறைய, உற்றார் உறவினர்)

(i) தந்தை சித்திரை மாத இறுதியில் ..... விபரங்களைக் கணக்கிட்டார்.

(ii) அவளுக்கு..... எவருமில்லை.

10. பின்வரும் வாக்கியத்தை எழுத்து மொழியாக்கி இறந்தகால வினைச் சொல் சேர்த்து மீண்டும் எழுதுக.
அவள் பென்சில் வேண்டுகின்றாள்.

.....

11. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

(i) Fence : ..... (ii) Leaves : .....

12. ஒவ்வொரு படத்துக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.





(i) ..... (ii).....

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) my / is / present / This / birthday

.....

(ii) I/ school/ come/ by /bicycle / to

.....

14. " கிரீடா பிட்டிய" என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

.....

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

எனக்கு பந்து தாருங்கள் .....

16. "அறுபத்தொன்பதாயிரத்து ஐந்நூற்று எழுபத்தொன்று" எனும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

.....

17. பின்வரும் எண்களுள் 9 எனும் இலக்கத்தினால் காட்டப் பெறுமதி 900 ஆகவுள்ள எண் எது?

9270, 8729, 6924, 3197, ...

18. (i) இவ் எண் கோலத்தில் அடுத்து வரும் எண்ணை எழுதுக.

48, 43, 38, 33, ...


(ii) கீழே தரப்பட்டுள்ள எண்களின் ஒழுங்குமுறைக்கு ஏற்ப எண்கோலம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கு நீக்கப்பட வேண்டிய எண் எது?

48, 36, 24, 12, 6 .....

19. ஒரு பாடசாலையில் 2458 ஆண்பிள்ளைகளும், ஆண் பிள்ளைகளிலும் பார்க்க 328 பெண்பிள்ளைகள் கூடுதலாகவும் கல்வி கற்கின்றனர் எனின், அப் பாடசாலையில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

.....

20. கீழே தரப்பட்டுள்ள உருவில் வரையக் கூடிய சமச்சீர்க் கோடுகள் எத்தனை?



.....

21. கமலி தன்னிடம் இருந்த 2 ℓ 700 mℓ குளிர்பானத்தை சுமதி, மாலா, சாந்தி என மூன்று நண்பிகளுக்குச் சமமாகக் குவளைகளில் ஊற்றிக் கொடுத்தாள். மாலா தனக்குக் கிடைத்த பானத்தை மூன்று குவளை களில் சமமாக ஊற்றுவாளாயின், அவள் ஒரு குவளையில் ஊற்றிய பானத்தின் அளவு யாது?

..... mℓ

22. 24 மணித்தியாலக் கடிகாரம் 21: 40 எனக் காட்டும்போது 12 மணித்தியாலக் கடிகாரம் காட்டும் நேரம் யாது?


.....

23. 269 இனை 6 இனால் பெருக்கும்போது விடை யாது?

.....

24. ஒரு சாக்கில் 42 kg 350 g அரிசியும் வேறொரு சாக்கில் 25 kg 600 g அரிசியும் உள்ளது. இரு சாக்குகளிலும் உள்ள அரிசியின் அளவுகளிடையே உள்ள வித்தியாசம் யாது?

..... kg .....g

25. 

கட்டத்திலுள்ள பந்துகளின் எண்ணிக்கையை உரோம எண்ணில் எழுதுக.

.....

26. சவர்க்காரம் ஒன்றின் விலை ரூபாய் 175.00 வீதம் 5 சவர்க்காரக் கட்டிகளை வாங்கிக் கொண்டு ரூபாய் 1000 நாணயத் தாளொன்றைக் கொடுத்தால் மீதியாகக் கிடைக்கும் பணம் எவ்வளவு?

.....


27. 620 தேங்காய்களைச் சமமான நான்கு குவியல்களாக்கினால் ஒரு குவியலில் உள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

.....

28. குமுதா குறித்தவொரு இடத்திலிருந்து 100 m வடக்கு நோக்கிச் சென்று பின் அவ்விடத்திலிருந்து இடது கைப் பக்கமாகத் திரும்பி 100 m சென்றாள் எனின், அவள் பயணத்தை ஆரம்பித்த இடத்திலிருந்து தற்போது எத்திசையில் இருக்கிறாள்?

.....

29) மாணவர் குழுவொன்று அதிகமாக விரும்பும் பூக்கள் தொடர்பான தகவல்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளன.



(i) அதிகமான மாணவர் விரும்பும் பூ எது?

.....

(ii) குழுவில் மொத்தமாக எத்தனை மாண வர்கள் உள்ளனர்?

.....

பக்கம் 6 ஐப் பார்க்க

❖ **30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. மனிதர்கள் பொது இடங்களில் தவறாக நடந்து கொள்ளும் சந்தர்ப்பமாக அமைவது,
(1) அமைதியாக, ஏனையோருக்கு இடைஞ்சலின்றி நடத்தல்.
(2) உரத்துப் பேசி ஏனையோருக்கு இடைஞ்சல் விளைவிக்கும் வகையில் நடத்தல்.
(3) பயன்படுத்திக் கழித்த பொருட்களைப் பொது இடங்களில் வீசாது இருத்தல்.

31. பின்வருவனவற்றுள் ஆடிமாதம் பூக்கும் பூ எது?
(1) நாவல் (2) இலுப்பை (3) அன்னமுன்னா

32. வாகனம் ஒன்றைத் திருப்பும் போது, தடுப்பைப் பிரயோகிக்கும் போது ஒளிரும் விளக்குகள் முறையே
(1) செம்மஞ்சள், சிவப்பு (2) பச்சை, சிவப்பு (3) சிவப்பு, நீலம்

33. பொருள் ஒன்றைக் கொள்வனவு செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயம் பின்வருவனவற்றுள் எது?
(1) பொருளின் காலாவதியாகும் திகதி.
(2) பொருளைப் பெற்றுக் கொள்ளும் வியாபார நிலையம்.
(3) பொருளின் மேலுறையின் அழகு.

34. 
படத்தில் காட்டியவாறு கண்ணாடிப் பாத்திரம் ஒன்றில் சிவப்பு நிற சாயத்தினை இட்டு நன்றாகக் கலக்கிய பின் பனிக்கட்டி ஒன்றினை மெதுவாகப் போடும்போது சிறிது நேரத்தின் பின் அவதானிக்கக் கூடியது?
(1) பாத்திரத்தின் வெளியே சிவப்புநிற நீர்த்துளிகள் காணப்படும்.
(2) நீர் முழுமையாக குளிர்ச்சியடைந்து நீர்த் துளிகள் வெளியே காணப்படும்.
(3) வெளிப்புறத்தில் எதுவித மாற்றமும் இன்றி உள்ளே நீர் குளிர்ச்சியடையும்.

35. எமது ஆரோக்கியமான வாழ்வுக்குப் போசணை மிக்க உணவாக அமையும் இலைக்கஞ்சி தயாரிக்கப் பயன்படுத்தக்கூடிய இலை வகைகள் எவை?
(1) சாத்தாவாரி, வல்லாரை (2) பொன்னாவரசு, நன்னாரி (3) குப்பைமேனி, ஆடாதோடை


36. நாம் உண்ணும் உணவுகள் பல்வேறு காரணங்களால் அசுத்தமடைகின்றன. அவ்வாறு அசுத்தமடையும் சந்தர்ப்பங்களில் ஒன்று,
(1) உணவு தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருள்கள், உபகரணங்கள் சுத்தமாக இருத்தல்.
(2) சரியாகப் பொதி செய்யப்படாமையால் நீள்மூஞ்சிவண்டு புழுக்கள் போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புக்கள்.
(3) உணவு தயாரிக்கும்போது அதற்குப் பொருத்தமான மேலங்கி அணிதல்.

37. சமையல் பாத்திரங்களைப் பாவித்த பின் நன்றாகக் கழுவி உலர விட வேண்டும். இதற்கான மிகப் பிரதானமான காரணம் யாது?
(1) ஈரலிப்பில் கிருமிகள் வளர்ந்து அப்பாத்திரங்களில் தயாரிக்கும் உணவு விரைவாகப் பழுதடைவதால்
(2) பாத்திரங்களை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டி இருப்பதால்,
(3) பாத்திரங்கள் அழகு பெறும் என்பதால்.

38. மூன்று சட்டக் காந்தங்களின் முனைவுகள் ஒன்றுடன் ஒன்று கவரும் விதத்தினைக் காட்டும் சரியான உரு,
(1) | S N | N S | S N | (2) | S N | S N | N S | (3) | N S | N S | N S |

39. பின்வருவனவற்றுள் தொற்று நோய், தொற்றா நோய் என்பன முறையே
(1) சின்னமுத்து, உயர்குருதி அழுத்தம் (2) டெங்கு, நெருப்புக் காய்ச்சல் (3) நீரிழிவு, புற்று நோய்

40. வித்துக்களை நடுகை செய்வதற்கு முன்பு நீரில் ஊற விடுவதற்கான காரணம்
(1) முளைத்தலை விரைவுபடுத்துவதற்கு.
(2) வித்து முதிர்ச்சியடைவதற்கு.
(3) பூச்சித் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதற்கு.

41. 

அருகில் உள்ள உருக்கள் காட்டும் சந்தர்ப்பங்களுள் எந்தச் சந்தர்ப்பத்தில் பாரத்தை இலகுவாக உயர்த்த முடியும்?
(1) உரு A மூலம் உயர்த்தலாம்.
(2) உரு B மூலம் உயர்த்தலாம்.
(3) உரு A, உரு B ஆகிய இரண்டினாலும் இலகுவாக உயர்த்தலாம்.

பக்கம் 7 ஐப் பார்க்க

42. உடைந்த கண்ணாடித் துண்டுகள், கடதாசிக் கழிவுகள், இலைகள் என்பவற்றை இடுவதற்குப் பொருத்தமான கழிவு நிறத் தொட்டிகளின் நிறங்கள் முறையே,

(1) சிவப்பு, செம்மஞ்சள், பச்சை (2) சிவப்பு, பச்சை, நீலம் (3) சிவப்பு, நீலம், பச்சை

43. ஊசித்துளைக்கமராவைச் செய்யும்போது அதனைச் செய்யப் பயன்படுத்துகின்ற பின்வரும் எப்பொருளின் சரி மத்தியில் துளையொன்று இடம்பெறுகின்றது?

(1) கறுப்பு நிறத்தாளில் (2) அட்டைப் பெட்டியின் மேற் பக்கத்தில் 3) வெள்ளை நிற ரிசுத்தாளில்

44. பாடசாலையில் விளையாட்டு மைதானம், சங்கீத அறை, விவசாய அலகு ஆகியவற்றில் காணக் கூடியவை முறையே,

(1) வொலிபோல் வலை, வயலின், மண்வெட்டி.
(2) உதைபந்து வலை, அலவாங்கு, தபேலா
(3) மண்வெட்டி, பேற்றுக் கம்பம், சுருதிப் பெட்டி


45. பொதுப் போக்குவரத்துச் சாதனங்களைப் பயன்படுத்தும்போது செய்யக் கூடாத செயல் எது?

(1) கட்டாயமாகப் பயணச் சீட்டுப் பெறுதல்
(2) மிதி பலகையில் பயணம் செய்யாதிருத்தல்.
(3) ஆசனங்களைச் சேதப்படுத்துதல்.

46. உடலுக்கு சக்தி தரும் உணவாகவும் உடல் வளர்ச்சிக்குரிய உணவாகவும் அமையும் உணவுகள் முறையே,

(1) மரவள்ளி, பயறு (2) கடலை, இறைச்சி (3) பலாக்காய், உருளைக்கிழங்கு

47. A,B,C ஆகிய மூன்று மின்குமிழ்கள் இரண்டு உலர்மின்கலங்களில் பொருத்தப்பட்டுள்ளன. இவ் அமைப்பின்படி ஒளிருவது,



(1) மின்குமிழ் A மாத்திரம்
(2) மின்குமிழ் A யும் B யும் மாத்திரம்
(3) மின்குமிழ் A,B,C ஆகிய மூன்றும்

48. விடிவெள்ளி நம் விளக்கு ஜலசா
விரி கடலே பள்ளிக் கூடம் ஜலசா.... எனும் பாடல்

(1) கல் உடைக்கும் போது பாடப்படும்.
(2) விவசாயம் செய்யும் போது பாடப்படும்.
(3) மீன் பிடிக்கும் போது பாடப்படும்.

49. கிரிகல்பொத்த, கிரிஹொரங்க போன்ற பெயர்கள் குறித்துக் காட்டுவன,

(1) நீர்வீழ்ச்சி, வேடுவர் நடனம் (2) மலை, பள்ளத்தாக்கு (3) மலை, வேடுவர் நடனம்

50. தேசியக்கொடி ஏற்றப்படும்போது நாம் நிற்க வேண்டிய முறைகளுள் அடங்காதது,

(1) உடலை நேராக வைத்தபடி நிற்றல்.
(2) தலையைத் தாழ்த்தி நிலத்தைப் பார்த்தபடி நிற்றல்.
(3) குதிக்கால்களை அருகருகே வைத்தபடி நிற்றல்.

51. நுளம்பினால் பெருகும் நோய்களை மாத்திரம் கொண்ட விடை எது?

(1) டெங்கு, கொரோனா, யானைக்கால்.
(2) மலேரியா, டெங்கு, சிக்குன்குன்யா.
(3) யானைக்கால். நீர்வெறுப்பு, டெங்கு.

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

52. வேலைகளை இலகுவாக்கும் கருவிகளான துறப்பணம், கவர்ச்சுத்தியல் ஆகியவற்றால் செய்யப்படும் வேலைகள் முறையே,
(1) ஆணிகளை உட்செலுத்துதல், கம்பிகளை முறுக்குதல்.
(2) போத்தல் மூடி திறத்தல், ஆணிகளைக் கழற்றுதல்.
(3) கதவில் துளையிடுதல், ஆணிகளைப் பிடுங்குதல்.

53. எமது நாட்டின் பொதுப் போக்குவரத்துப் பேருந்தில் கர்ப்பிணித் தாய்மார் தவிர பயணிகள் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ள வேறு இரு தரப்பினர் யார்?
(1) குழந்தைகள், நோயாளிகள் (2) மதகுரு, வலது குறைந்தோர் (3) முதியோர், நோயாளிகள்

54. கடலினுள் செல்பவர்கள் திசைகாட்டிகளை எடுத்துச் செல்வதற்கான காரணம் யாது?

(1) கடலில் உள்ள பெரிய உயிரினங்களை இலகுவாகக் கண்டறிவதற்கு
(2) செல்ல வேண்டிய திசைகளைக் கண்டறிவதற்கு
(3) புயல் தாக்கங்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு

55. பாடசாலை நிறைவடைந்து நடை பயணத்தில் வீடு சென்றுகொண்டிருந்த வேளை உமது நண்பன் மயக்கமுற்று விழுந்தால் நீங்கள் உடனடியாகச் செய்யக் கூடியது.
(1) உரத்துச் சத்தமிட்டு பெரியோர்களின் உதவிகளை நாடுதல்.
(2) நண்பருடைய வீட்டுக்கு நீங்களாக ஓடிச் சென்று கூறுதல்.
(3) உம்மால் செய்யக்கூடிய முதலுதவிகளை தயக்கமின்றி செய்தல்.

56. நடுநிலையான நடத்தையை வெளிக்காட்டும் ஒருவரிடம் காணமுடியாத பண்பு பின்வருவனவற்றுள் எது?
(1) மரியாதையான சொற்களையும் முகபாவங்களையும் பயன்படுத்துதல்.
(2) ஆட்களின் மனதைத் தாக்கும் வகையில் சொற்களைப் பயன்படுத்துதல்.
(3) ஏனையோருக்குக் கோபம் ஏற்படாதவாறு சொற்களைப் பயன்படுத்துதல்.

57. வெளிநாட்டில் வசிக்கும் உமது உறவினர் ஒருவர் கடிதம் ஒன்றை மிகவும் துரிதமாக அனுப்புமாறு கேட்டுக் கொண்டால் நீங்கள் பயன்படுத்தக் கூடிய மிகவும் பொருத்தமான முறை
(1) விமானத் தபால் (2) கடுகதித் தபால் (3) மின்னஞ்சல்

58. "தன்னிறைவும் செழிப்பும்" என்பதைக் குறிக்க, தேசிய இலச்சினையில் காணப்படும் குறியீடு,
1) நெற்கதிர்கள் (2) பூவிதழ்கள் (3) நிறைகுடம்

59. தூர நோக்கற்ற மனிதனின் செயற்பாடுகளினால் அனர்த்தம் நிகழக் கூடிய சந்தர்ப்பம்.

(1) சுனாமித் தாக்கம் காரணமாக உயிர்ச்சேதம் ஏற்படல்
(2) மின்னல் தாக்கம் காரணமாகப் பயிர்ச்செய்கை அழிவடைதல்.
(3) சதுப்பு நிலங்களை நீக்கிக் கட்டுமாண வேலைகளைச் செய்வதால் வெள்ளப்பெருக்கு ஏற்படுதல்.

60. "மைதானத்தில் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த வேளையில் பலத்த காற்று வீசியது. அப்போது நான் நடந்துகொண்ட விதம்" என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

(i) .....

.....

(ii) .....

.....

(iii) .....

.....